2007 மே 9]

ரிஷிவந்தியம், சங்கராபுரம், முகையூர் ஆகிய தொகுதிகள் மிகவும் பின்தங்கிய தொகுதிகள். இந்த 3 தொகுதிகளை மையமாக வைத்து ஒரு தொழில்நுட்பக் கல்லூரி அமைக்க அரசு முன்வருமா என்று உங்கள்மூலமாக அறிய விரும்புகின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. சு. சிவராஜ் அவர்களே இதுபோன்ற கல்லூரிகளைத் துவக்குகிற அனைத்து வசதிகளும் படைத்தவர். அதே பகுதியிலேயே அவர் துவக்க முன்வந்தால், நிச்சயமாக அரசு அனுமதி வழங்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 184, மாண்புமிகு உறுப்பினர் திரு. கோவை தங்கம், மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் அவர்கள்.

**184—**

**கடனுதவி**

***298—திரு. கோவை தங்கம்:**

மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வால்பாறையில் சிறு தொழில் செய்யக் கடன் உதவி வழங்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**மாண்புமிகு திரு. பொங்கலூர் நா. பழனிசாமி, ஊரகத் தொழில் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) வால்பாறையில் சிறு தொழில் செய்யக் கடன் உதவி வழங்கப்படுமா என்று கேட்டிருக்கிறார்கள். வால்பாறையில் சிறு தொழில் செய்யக் கடன் உதவி வழங்க அரசு ஆவன செய்து வருகிறது.

[2007 மே 9

வால்பாறை தொகுதியில் படித்து வேலையில்லாமல் இருக்கும் இளைஞர்கள் சிறு தொழில் துவங்க முன்வந்தால், அவர்களது திட்ட மதிப்பீட்டைப் பொறுத்து, பாரதப் பிரதமரின் சுய வேலைவாய்ப்புத் திட்டத்தின்கீழ் உதவிகள் அளிக்கப்படும். மேலும், தாட்கோமூலமும், மகளிர் மேம்பாட்டுத் திட்டத்தின்மூலமும் சுயமாகத் தொழில் மற்றும் வியாபாரம் துவங்க இந்த அரசு பல நடவடிக்கைகளை எடுத்து வருகிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. கோவை தங்கம்.

**திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வால்பாறையில் தொழிற்சாலைகள் ஒன்றும் கிடையாது. வணிக வியாபாரத் தொழிற்சாலைகளும், சிறு வியாபாரங்களும் குறைவாகத்தான் இருக்கின்றன. அங்கே இருப்பது தேயிலைத் தொழிற்சாலைகள் மட்டும்தான். அவற்றிலும், சம்பளம் குறைவாக வழங்குவதால், அங்கிருந்த 50,000 பேர்கள் கடந்த 5 ஆண்டுகளிலே வால்பாறையைவிட்டு வெளியேறிவிட்டார்கள். ஆகவே, அங்கே வறுமையில் இருக்கின்ற, படித்துவிட்டு வேலை இல்லாமல் இருக்கின்ற இளைஞர்கள், சிறு தொழில் செய்யக் கடனுதவி வழங்குவதற்கு, வங்கிகள்மூலம் இல்லாமல் அரசே உதவி செய்வதற்கு முன்வருமா என்பதைத் தங்களுடைய வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. பொங்கலூர் நா. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பாரதப் பிரதமரின் சுய வேலைவாய்ப்புத் திட்டத்தின்கீழ், படித்து வேலையில்லாத இளைஞர்களுக்கு சிறு தொழில் தொடங்க வங்கிகள்மூலம் கடனுதவி வழங்கும் திட்டம் நமது மாநிலத்தில் சிறப்பாகச் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டத்திற்கான அடிப்படைத் தகுதிகளின்படி 18 முதல் 35 வயதிற்கு உட்பட்ட, குறைந்தபட்சம் 8 ஆம் வகுப்பு தேர்ச்சிபெற்றவர்கள், அவர்தம் மொத்தக் குடும்ப வருமானம் ஆண்டுக்கு ரூ.40,000/-க்கு மிகாமலும், தொடர்ந்து அப்பகுதியில் 3 ஆண்டுகளாகக் குடியிருப்பவர்களாகவும் இருத்தல் வேண்டும். ஆதி திராவிடர், பழங்குடியினர், பெண்கள், ஊனமுற்றோர், படை வீரர்கள் ஆகியோருக்கு வயது உச்சவரம்பில் 10 ஆண்டுகள் தளர்வு

2007 மே 9]

செய்யப்பட்டு, தனி நபருக்கு அதிகபட்சமாகத் தொழில் செய்வதற்கு ரூபாய் இரண்டு இலட்சமும், சேவைப் பிரிவில் ரூபாய் இரண்டு இலட்சம் வரையிலும் வியாபாரம் செய்வதற்கு ரூபாய் ஒரு இலட்சம் வரையிலும் மேற்கண்ட தொழில்கள் தொடங்குவதற்காக கடன் வழங்கப்படுகிறது. மேலும் இத்திட்ட மதிப்பீட்டில் 15 சதவிகிதம், அதிகபட்சம் 7,500 ரூபாய் வரை மானியமாக வழங்கப்படுகிறது. இத்திட்டத்தின்கீழ் பயன்பெற விரும்புவோர், கோயமுத்தூர் மாவட்டத் தொழில் மையப் பொது மேலாளரை அணுகி, ஆலோசனை பெறலாம்.

முற்பகல் 9-55

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. கோவை தங்கம்.

**திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வால்பாறை தொகுதியில் இருக்கின்ற அரசுடைமையாக்கப்பட்ட வங்கிகளை நான் பலமுறை அணுகி ஏழையெளிய ஆதி திராவிட, பிற்படுத்தப்பட்ட, சிறுபான்மை மக்களுக்காக, படித்துவிட்டு வேலையில்லாதவர்களுக்காக சிறு தொழில் செய்வதற்குக் கடனுதவி கேட்டபோது, அங்கே கடன் வழங்கப்படவில்லை. கோயமுத்தூர் மாவட்டத்திலே மாவட்ட ஆட்சித் தலைவர் தலைமையிலே நடைபெறுகின்ற Lead Bank meeting, அந்தக் கூட்டத்திலும் நான் பல முறை வலியுறுத்தி, வற்புறுத்தி இருக்கின்றேன். நிரந்தரத் தொழிலாளர்கள், அரசுப் பணியிலே இருக்கின்றவர்கள் பரிந்துரை செய்தும்கூட இரண்டு பேர்கள் பரிந்துரை செய்தும்கூட, அரசுடைமையாக்கப்பட்ட வங்கிகள், கூட்டுறவு வங்கிகளிலே கடனுதவி வழங்க முன்வருவதில்லை. கோயமுத்தூர் மாவட்டத்தினுடைய அமைச்சர் என்ற முறையிலும், சிறந்த முறையிலே இப்போது பணியாற்றிக்கொண்டிருக்கின்ற அமைச்சர் என்ற முறையிலும் அவரை நான் கேட்டுக்கொள்வது, அரசுடைமையாக்கப்பட்ட வங்கிகள், கூட்டுறவு வங்கிகள் எல்லாம் கடனுதவி வழங்குவதற்குக் காலதாமதம் செய்வதுடன் கடன் வழங்கவும் முன்வராததால், படித்துவிட்டு வேலையில்லாத இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பை உருவாக்குகின்ற வகையிலேயும் சிறு தொழில்களை உருவாக்குவதற்கு வழிவகை செய்கின்ற வகையிலேயும், கூட்டுறவு வங்கியைப்போல, அரசே கடனுதவி வழங்குவதற்கு ஒரு வங்கியை ஏற்படுத்திக் கடனுதவி வழங்குவதற்கு முன்வருமா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

[2007 மே 9

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. பொங்கலூர் நா. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பிரதமரின் சுய வேலைவாய்ப்புத் திட்டம் சிறப்பாக நடைபெற வேண்டுமென்றால் வங்கியாளர்களுடைய ஒத்துழைப்பினால் மட்டுமே முடியும். அதற்காக நமது மாண்புமிகு மத்திய நிதி அமைச்சர் திரு. ப. சிதம்பரம் அவர்களும், நமது மாண்புமிகு நிதி அமைச்சர் பேராசிரியர் அவர்களும், மின்சாரத் துறை அமைச்சர் அவர்களும் 9-9-2006 அன்று நமது கோட்டையில் வங்கியினுடைய தலைமை அதிகாரிகளையெல்லாம் வரவழைத்து, ஒரு கூட்டம் நடத்தினார்கள். அதன்வாயிலாக இப்பொழுது ஓரளவு முன்னேற்றம் ஏற்பட்டு, கடந்த காலத்தில் இல்லாத அளவுக்குக் கடனுதவிகள் அதிகமாக வழங்கப்படுகின்றன. இன்னும் பல்வேறு வகைகளிலே நாங்களும் முயற்சிகளை எடுத்துக்கொண்டிருக்கிறோம். ஆகவே, விரைவில் கடன் வழங்குவதில் நல்ல முன்னேற்றம் ஏற்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. கி. ஆறுமுகம்.

**திரு. கி. ஆறுமுகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்போது நம்முடைய அரசு சிறு தொழில் தொடங்க அதிகமாக ஆர்வத்தைக் காட்டி வருகின்றது. அந்த வகையிலே, இதுபோன்ற சிறு தொழில்கள் தொடங்குவதற்கு, குறிப்பாக, படித்த இளைஞர்கள், அதிலும் குறிப்பாகப் பெண்கள் தொடங்குகிற தொழில்களுக்கு 50 சதவிகிதம் மானியம் கொடுக்க நம்முடைய அரசு முன்வருமா எனத் தங்கள்மூலம் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. பொங்கலூர் நா. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பிரதமரின் சுய வேலைவாய்ப்புத் திட்டத்தின்கீழ் பெண்களுக்கு முன்னுரிமை கொடுத்து, 10 ஆண்டுகள் தளர்வு, அதாவது 35 ஆண்டுகளுக்குப் பதிலாக 45 ஆண்டுகள் வரை அவர்களுக்கு வயதுத் தளர்வு அளிக்கப்பட்டிருக்கிறது. இன்னும் பல சலுகைகள் வழங்கப்பட்டிருக்கின்றன. பெண்களுக்கு 5 சதவிகிதம் மானியமும் கூடுதலாகக் கிடைப்பதற்கு வழிவகைகள்

2007 மே 9]

செய்யப்பட்டிருக்கின்றன. நமது புதிய தொழில் கொள்கையை மாண்புமிகு முதல்வர் அவர்கள் விரைவிலே அறிவிப்பார்கள். அப்போது சிறு தொழில் கொள்கையும் அறிவிக்கப்பட்டு, மேலும் பல சலுகைகள் பெண்களுக்கு வழங்கப்படும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 185, மாண்புமிகு உறுப்பினர் திரு. அருள் அன்பரசு, மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள்.

**185—**

குடமுழுக்கு

***5169—திரு. அருள் அன்பரசு:**

மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சோளிங்கர் தொகுதியில் உள்ள அருள்மிகு ஸ்ரீ யோக நரசிம்மர் திருக்கோயிலுக்குக் குடமுழுக்கு நடத்திட அரசு நடவடிக்கை எடுக்குமா?

**மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன், இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

வேலூர் மாவட்டம், சோளிங்கர் அருள்மிகு ஸ்ரீ யோக நரசிம்மர் திருக்கோயிலுக்குத் திருப்பணிகள் செய்து குடமுழுக்கு நடத்தி நீண்ட காலமாகிவிட்டபடியால், அத்திருக்கோயிலில் திருப்பணி செய்திடத் திட்டமிடப்பட்டு, ரூபாய் 4 கோடி மதிப்பீட்டில் திருப்பணிகள் செய்திடும்பொருட்டு, கடந்த 28-2-2007 அன்று நானும், இந்தக் கேள்வியை எழுப்பி இருக்கக்கூடிய சம்பந்தப்பட்ட நம்முடைய சட்டமன்ற உறுப்பினர் திரு. அருள் அன்பரசு அவர்களும் மற்றும் துறையினுடைய அதிகாரிகளும் அங்கே சென்று, அந்தத் திருப்பணியைத் தொடங்கியிருக்கின்றோம். பணிகள் விரைவாக முடிக்கப்பட்டு, வெகுவிரைவில் குடமுழுக்கு நடைபெறும்.

*முற்பகல் 10-00*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. அருள் அன்பரசு.